(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 14(4).]

# பாராளுமன்றம்

## 14 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2015 யூன் 10 புதன்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2015 யூன் 23, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

ஆட்களைப் பதிவுசெய்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*

துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர்,— கப்பற்றொழில் முகவர்களுக்கு உரிமமளித்தல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1972 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க கப்பற்றொழில் முகவர்களுக்கு உரிமமளித்தல் சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள், கப்பற்றுறை அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2014 ஒகத்து மாதம் 28 ஆம் திகதிய 1877/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.06.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

தொழில் அமைச்சர்,— சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— தொழில் அமைச்சரினால் (136 ஆம் அத்தியாயமான) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 63 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டதும் 2015.06.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

சுற்றுலா மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்,— விளையாட்டில் ஊக்குவிப்புப் பதார்த்தப் பயன்பாடிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டில் ஊக்குவிப்புப் பதார்த்தப் பயன்பாடிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 34 ஆம் பிரிவின் கீழ் சுற்றுலா மற்றும் விளையாட்டுக்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2015 மே மாதம் 05 ஆம் திகதிய 1913/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.06.09ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

# திகதி குறிக்கப்படாத பிரேரணை முன்னறிவித்தல்

பா. 310/ '15

கௌரவ டீ.எம். ஜயரத்ன

கௌரவ தினேஷ் குணவர்தன

கௌரவ வாசுதேவ நாணாயக்கார

கௌரவ காமினி லொக்குகே

கௌரவ டலஸ் அழகப்பெரும

கௌரவ குமார வெல்கம

கௌரவ (செல்வி) கமலா ரணதுங்க

கௌரவ கீதாஞ்ஜன குணவர்தன

கௌரவ வீரகுமார திசாநாயக்க

கௌரவ ராஜீவ விஜேசிங்க

கௌரவ ஏ.எல்.எம். அதாஉல்லா

கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரன

கௌரவ சரத் குமார குணரத்ன

கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து

கௌரவ எஸ்.எம். சந்திரசேன

கௌரவ இந்திக்க பண்டாரநாயக்க

கௌரவ ரீ.பீ. ஏக்கநாயக்க

கௌரவ நாமல் ராஜபக்ஷ

கௌரவ ரொசான் ரணசிங்க

கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே

கௌரவ ஏ.எம். சாமிக புத்ததாஸ

கௌரவ திஸ்ஸ கரல்லியத்தே

கௌரவ சீ.பி.டீ. பண்டாரநாயக்க

கௌரவ டபிள்யூ. பீ. ஏக்கநாயக்க

கௌரவ (வண.) எல்லாவல மேதானந்த தேரர்

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே

கௌரவ ஜானக வக்கும்புர

கௌரவ மனுஷ நாணாயக்கார

கௌரவ சனத் ஜயசூரிய

கௌரவ உதித் லொக்குபண்டார

கௌரவ விநாயகமூர்த்தி முரளிதரன்

கௌரவ ஏ.ஆர்.எம். அப்துல் காதர்

கௌரவ விஜய தஹநாயக்க

கௌரவ ஜானக பண்டார

கௌரவ அருந்திக்க பர்னாந்து

கௌரவ லசந்த அலகியவன்ன

கௌரவ திளும் அமுணுகம

கௌரவ லொஹான் ரத்வத்தே

கௌரவ (திருமதி) சுமேதா ஜீ. ஜயசேன

கௌரவ துலீப் விஜேசேக்கர

கௌரவ ஹேமால் குணசேக்கர

கௌரவ எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்

கௌரவ ஜயந்த கெடகொட

கௌரவ வை.ஜீ. பத்மசிரி

கௌரவ சனீ ரோஹன கொடிதுவக்கு

கௌரவ ஏ.டீ.சுசில் பிரேமஜயந்த

கௌரவ டபிள்யு.டி.ஜே. செனவிரத்ன

கௌரவ மொஹான் பிரியதர்ஷன த சில்வா

கௌரவ பந்துல குணவர்தன

கௌரவ பியங்கர ஜயரத்ன

கௌரவ விக்டர் அந்தனீ

கௌரவ விமல் வீரவங்ச

கௌரவ திலங்க சுமதிபால

கௌரவ ரத்னசிறி விக்கிரமநாயக்க

கௌரவ ஆர். துமிந்த சில்வா

கௌரவ ஜயரத்ன ஹேரத்

கௌரவ (திருமதி) மாலனீ பொன்சேக்கா

கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன

கௌரவ (பேராசிரியர்) திஸ்ஸ விதாரண

கௌரவ சந்திரசிறி கஜதீர

கௌரவ (கலாநிதி) சரத் வீரசேகர

கௌரவ அதாவுத செனெவிரத்ன

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே

கௌரவ சாலிந்த திசாநாயக்க

கௌரவ எரிக் பிரசன்ன வீரவர்தன

கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல

கௌரவ கனக ஹேரத்

கௌரவ டிலான் பெரேரா

கௌரவ ரீ. ரஞ்ஜித் த சொய்சா

கௌரவ (டாக்டர்) ரோஹன புஷ்ப குமார

கௌரவ ரோஹித அபேகுணவர்தன

கௌரவ லக்ஷமன் வசந்த பெரேரா

கௌரவ சீ.பீ. ரத்நாயக்க

கௌரவ விஜித பேருகொட

கௌரவ மொஹான் லால் கிரேரு

கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம

கௌரவ அநுர பிரியதர்ஷன யாப்பா

கௌரவ தேனுக விதானகமகே

கௌரவ (திருமதி) உபேக்ஷா சுவர்ணமாலி

கௌரவ ஜகத் பாலசூரிய

கௌரவ வி.கே. இந்திக

கௌரவ சரண குணவர்தன

கௌரவ குணரத்ன வீரகோன்

கௌரவ தாராநாத் பஸ்நாயக்க

கௌரவ செஹான் சேமசிங்க

கௌரவ எச்.ஆர். மித்ரபால

கௌரவ ஜே. ஆர். பி. சூரியப்பெரும

கௌரவ விதுற விக்கிரமநாயக்க

கௌரவ ஆர்.டீ. விமலதாச

கௌரவ பொ. பியசேன

கௌரவ (பேராசிரியர்) ஜீ.எல். பீரிஸ்

கௌரவ பிரபா கணேசன்

கௌரவ ஜீவன் குமாரணதுங்க

கௌரவ சஜின் த வாஸ் குணவர்தன

கௌரவ ஜயசிங்க பண்டார

கௌரவ நிமல் விஜேசிங்க

கௌரவ ருவன் ரணதுங்க

கௌரவ டிரான் அலஸ்

கௌரவ நிமல் சிறிபால த சில்வா

கௌரவ லலித் திசாநாயக்க

கௌரவ தயாசிறித திசேரா

கௌரவ சிறிபால கமலத்

கௌரவ நிர்மல கொத்தலாவல

கௌரவ ரோஹன திசாநாயக்க

கௌரவ (திருமதி) பவித்ராதேவி வன்னிஆரச்சி

கௌரவ சில்வேஸ்திரி அலன்றின்

கௌரவ நிஷாந்த முதுஹெட்டிகமகே

கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண,— பிரதம அமைச்சர் கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்கள் மீது நம்பிக்கையின்மை,—

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புக்கு முரணான விதத்தில் பாராளுமன்றத்தின் பெரும்பான்மையின் விருப்பத்தை விசாரிக்காது பிரதம அமைச்சர் கௌரவ ரணில் விக்கிரமசிங்க பதவியில் கடமையாற்றுவதனாலும்;

பாரியளவிலான மற்றும் சிறியளவிலான பல அபிவிருத்திக் கருத்திட்டங்களை இடைநிறுத்தியமையின் காரணமாக தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த இலட்சக்கணக்கானோரின் தொழிலையும், வாழ்வாதாரத்தையும் இழக்கச் செய்தமையினாலும்;

பொலிஸ் கட்டளைச் சட்டத்தை மீறி அரசியல் பழிவாங்கல் மற்றும் பயமுறுத்தலுக்காக இலங்கைப் பொலிஸை தீவிரமாக அரசியல்மயப்படுத்தியமையினாலும்;

பொதுசன வாழ்க்கைக்கு அத்தியாவசியமான உணவுப்பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளமை காரணமாகவும், தேயிலை, இறப்பர் மற்றும் நெல் ஆகியவற்றுக்கு அரசாங்கத்தினால் உத்தரவாதமளிக்கப்பட்ட விலை வழங்கப்படாமையின் காரணமாகவும் வாழ்க்கைச் செலவில் நெருக்கடியை உருவாக்கியமையினாலும்;

இலங்கைப் பிரசையல்லாதவரும், வெளிநாடொன்றுக்கு அளித்துள்ள சத்தியப்பிரமாணம் மூலம் இலங்கைக்கு சார்பாகவும் பற்றுறுதியோடும் இருப்பதை முற்றாகவும் முழுமையாகவும் நிராகரித்துள்ளவருமான ஒருவரை நாட்டின் ஒட்டுமொத்த நிதி முறைமையை நிருவகிக்கும் முதன்மையான பொறுப்பை வகிக்கின்ற மத்திய வங்கியின் ஆளுநர் பதவிக்கு நியமித்தமையினாலும்;

திறைசேரி முறிகளை வழங்கியதன் ஊடாக இலங்கை மத்திய வங்கியின் வரலாற்றில் இடம்பெற்ற மிகப் பெரிய நிதி மோசடி மற்றும் அதனூடாக நாட்டிற்கு தாங்கிக்கொள்ள முடியாதவாறு தொடர்ந்தும் இடம்பெறுகின்ற நிதிசார் விளைவுகளுக்கு பொறுப்புக்கூற வேண்டியுள்ளமையினாலும்;

இலங்கையின் மிகவும் இக்கட்டான நிலையை எதிர்நோக்கிய சந்தர்ப்பங்களில் நட்புறவையும், ஒத்துழைப்பையும் உச்ச அளவில் வழங்கிய நாடுகள் மற்றும் அரசுகள் தொடர்பாக பின்பற்றிய எதேச்சாதிகார, தூரநோக்கற்ற நடவடிக்கைகளின் விளைவாக மேற்படி சர்வதேச உறவுகளை கடுமையாக பாதிப்படையச்செய்தமையினாலும்; மற்றும்

இலங்கையின் பொருளாதார அபிவிருத்திச் செயற்பாட்டுக்கு உயர் பங்களிப்பை வழங்குகின்ற தனியார்துறை ஊக்கமிழக்கின்ற வகையில் அரசிறைக் கொள்கையை நடைமுறைப்படுத்தியமையினாலும்

பிரதம அமைச்சர் கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்கள், தொடர்ந்தும் பிரதம அமைச்சராக அப்பதவியில் செயற்படுவதற்கான ஆற்றல் தொடர்பில் நம்பிக்கை இழந்துள்ளதென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.